1981 மே 31 - ஜூன் 1

# யாழ்ப்பாணத்தில்



## நடந்தவை -
## அதன் தொடர்ச்சி !





தங்க. முகுந்தன்

1981 மே 31 – ஜூன் 5

# யாழ்ப்பாணத்தில் நடந்தவை – அதன் தொடர்ச்சி!

தங்க. முகுந்தன்

பிள்ளையில்லாத அன்புத் தம்பதியினர்
எல்லா இளைஞர்களையும் தம் பிள்ளைபோல் நோக்கி
அவர்கள் வரும் நேரமெல்லாம் தாகத்திற்கும் பசிக்கும் உணவளித்து
தங்கவும் வசதி செய்திருந்த நிகழ்வுகளை அறிந்தவன் நான்!


வருங்கால தமிழர் நலன்கருதி
பேச வருகின்றோம் எனக்கூறி
13.07.1989ல் அவர்களது இல்லத்தில்
தேநீரும் பிஸ்கட்டும் சாப்பிட்டுவிட்டு
சுட்டுக்கொலைசெய்தனர்
அந்த இல்லத்தின் தலைவனை!


பின்னர் தனித்திருந்து
மக்கள் பணி ஆற்றவென
யாழ் முதல்வராகிய
பெருமைக்குரிய தலைவியை
திடீரென வீடுபுகுந்து சுட்டனர்!

அவர்களிருவருக்கும்
பிள்ளையாகப் பழகியதால்
ஆண்டுகள் பல சென்றபின்
இந்நூலை அவர்களுக்கு
சமர்ப்பணம் செய்வதில்
ஓரளவு மனநிறைவடைகின்றேன்!


என்றும் நன்றி மறவாத
தங்க. முகுந்தன்.

திரு. வெ.யோகேஸ்வரன் அவர்களின் நேரடிச் சாட்சியமான நூலில் இருந்து!



My Jeep completely burnt



Top view of my house -
Completely Burnt by the Police



Another view of my House



1981மே 31ஆந்திகதி நாச்சிமார் கோவிலடியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்ட அபிவிருத்திச் சபை - பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றபோது இடம்பெற்ற பொலிஸ்காரர் மீதான துப்பாக்கிச்சூட்டைத் தொடர்ந்து பொலிசாரினால் வன்முறைகள் ஏற்படுத்தப்பட்டன!நாச்சிமார் கோவிலடியில் ஆரம்பித்த வன்முறைகள் யாழ் நகருக்கும் பரவியது.

இந்த நிகழ்வுகள் யாவையும் மிக விபரமாக "மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது" என்னும் நூலில் படங்களுடன் இன்றும் இருப்பதால் நடைபெற்ற சம்பவங்களை மீளப் பதிவிடாது தவிர்க்கின்றேன்.

அந்த நூலின் அட்டைப்படத்தின் கீழ்

மே 31 இரவு....யாழ். பொது நூலகம்,ஈழநாடு அலுவலகம், பா.உ. வின் வீடு, த.வி.கூட்டணி அலுவலகம், நாச்சிமார் கோயில் - வீடுகள், பொது மார்கெட், அநேக வர்த்தக நிலையங்கள், மோட்டார் வாகனங்கள், யாழ்ப்பாணமே எரிகிறது!...... கொலைகள்!.... கொள்ளைகள்!.....ஏன்? .... எப்படி நடந்தது இந்தப் பாதகம்? அரச பயங்கரவாதச் செயல்கள் அநேக படங்களுடன் விபரம் தருகிறது இந்நூல்.

என்றிருக்கிறது!

உள்ளே விபரமாக திகதி குறிப்பிட்டு எழுதியுள்ளார் 24 மணிநேரம் ஆசிரியர் "நீலவண்ணன்" என அழைக்கப்படும் அமரத்துவமடைந்த "செங்கைஆழியான்" கலாநிதி க.குணராசா அவர்கள்!

மேலோட்டமாக வாசிப்பவர்கள் மே 31 இரவே பொது நூலகமும்,ஈழநாடும் எரிந்ததாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு. அந்த இரண்டு பொக்கிஷங்களும் ஜூன் 1 இரவே எரிக்கப்பட்டன. இது பற்றிய முழு விபரங்களும் எனது முதல் நூல் **"யாழ்ப்பாண பொது சன நூலகம் (எரிக்கப்பட்டு 34 வருடங்கள்) 01.06.2015 உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு"** என்பதில் குறிப்பிட்டுள்ளேன்.

31.05.1981 நாச்சிமார் கோவில் கோபுரம் எரிக்கப்பட்டு ஆலய உடைமைகள் - வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டு வன்முறைகள் அரங்கேறிய இடத்தில் - அன்னை ஸ்ரீ காமாட்சி தேவியின் ஆலயம் மீள புனரமைக்கப்பட்டு - புதிய கோபுரத்தின் கும்பாபிஷேகம் 1985ல் இடம்பெற்ற வேளையில் அதில் கலந்து கொண்டதும் - இன்று அதே இடத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சொந்த அலுவலகத்தில் நான் பணிபுரிவதும் மறக்க முடியாதவை!

தந்தை செல்வா வழியில் தமிழரசுக் கட்சியில் மாத்திரமல்ல அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலும் இந்திய இலங்கைக்

காங்கிரஸ் கட்சியிலும் (தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியாக இயங்குகிறது) இருந்த மதிப்புக்குரிய தலைவர்களை நான் முன்னரே நினைவுகூர என்னாலான முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன். இதற்காக எமது கட்சியின் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களைக் கொண்டு தேர்தல் திணைக்களத்திற்குக் கடிதம் எழுதி 1947ஆம் ஆண்டிலிருந்து தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வெற்றிபெற்ற கட்சித் தலைவர்களினது பெயர் விபரங்கள் மற்றும் அவர்கள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை என்பவற்றை சேகரிக்க முயற்சித்தேன். 1947ல் மலையகத்தில் போட்டியிட்ட இந்திய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி பெற்ற வாக்குகளையும் பெற்றுக் கொண்டேன். எமது பகுதிகளில் வாழும் அப்பாவி மக்களினதும் எமது கட்சித் தலைவர்களினதும் படுகொலைகளாலும் விண் மற்றும் பீரங்கி ஷெல் தாக்குதல்களினால் ஏற்பட்ட பேரிழப்புக்கள் போன்றவற்றாலும் அது தடைப்பட்டுக்கொண்டிருந்தது. இருக்கிறது.

எனினும் தந்தை செல்வாவைப்பற்றி ஏப்ரல்1994ல் ஒரு கட்டுரையை எழுதி பல பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்தும் வீரகேசரி "தமிழ் மக்களின் உரிமைக்காவலனாக விளங்கிய தந்தை செல்வநாயகம்" என்ற தலைப்பிட்டு 26.04.1994ல் 2ம் பக்கத்தில் அவரது நினைவு தினத்தன்றும், தினகரன் 28.04.1994ல் "எஸ்.ஜே.வி. செல்வநாயகம் நினைவு" என்ற தலைப்பிட்டு 3ம் பக்கத்திலும், கட்டுரையைப் பகுதியாக பிரசுரித்தன. தந்தை செல்வாவின் மகன் திரு. செ. சந்திரகாசன் அவர்களால் இந்தியாவில் வெளியிடப்படும் "ஈழ சுதந்திரன்" வைகாசி – ஆனி இதழில் "தந்தை செல்வாவை நினைவு கொள்வோம் - செந்தமிழ் ஈழம் வெல்வோம்" என்ற தலைப்பிட்டு கட்டுரை முழுவதையும் வெளியிட்டது. இதனை இரண்டாவது நூலாக்கி கடந்த 26.04.2017ல் **"தீர்க்கதரிசி தந்தை செல்வா"** என்னும் பெயரில் செல்வா சமாதியில் வணக்கத்திற்குரிய ஜெபநேசன் அடிகளாரின் கரங்களினால் திரு. செ. சந்திரகாசன் அவர்களுக்கு வழங்கி வெளியிட்டேன்.

அமரர்களான அ. அமிர்தலிங்கம், வெ. யோகேஸ்வரன், அ. தங்கத்துரை, கலாநிதி நீலன் திருச்செல்வம், பொன். மதிமுகராசா, குமார் பொன்னம்பலம், மு. சிவசிதம்பரம், ந. இரவிராஜ், ஆகியோருக்கும் எனது அஞ்சலி நினைவுகளை அந்தந்த தருணங்களில் பத்திரிகைகளில் எழுதியுள்ளேன். குறிப்பாக எழுதவேண்டியவர்களது பட்டியலில் பின்வருவோர் மிகமுக்கியமானவர்களாக இருந்தார்கள். தற்போதும் இருக்கிறார்கள். திருவாளர்கள் 1. ஜீ.ஜீ. பொன்னம்பலம் 2. சா.ஜே.வே. செல்வநாயகம் 3. கு. வன்னியசிங்கம் 4. வி.ஈ.கே.ஆர்.எஸ். தொண்டமான் 5. டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் 6. செனட்டர் நடராசா 7. வேல்முருகு மாஸ்டர் 8. எஸ்.சம்பந்தமூர்த்தி 9. அ. அமிர்தலிங்கம் 10. மு.

சிவசிதம்பரம் 11. வி. தருமலிங்கம் 12. மு. ஆலாலசுந்தரம் 13. சாம். தம்பிமுத்து 14. திருமதி. கலா தம்பிமுத்து 15. தா. திருநாவுக்கரசு 16. வி. யோகேஸ்வரன் 17. அ. தங்கத்துரை 18. திருமதி. சரோஜினி யோகேஸ்வரன் 19. பொன். சிவபாலன் 20. பொன். மதிமுகராஜா 21. கலாநிதி நீலன் திருச்செல்வம் 22. குமார் பொன்னம்பலம் 23. சிறீபாஸ்கரன் 24. நிமலன் சவுந்தரநாயகம் 25. சி. சிவமகாராசா 26. ந. இரவிராஜ் 27. ஜோசப் பரராஜசிங்கம் 28. சி. நமசிவாயம் 29. ச. முத்துலிங்கம் போன்றோர்.

இவர்களில் தற்போது நினைவு கூரப்படுகின்ற திரு. வெ. யோகேஸ்வரன் அவர்களைப் பற்றியும் திருமதி. சரோஜினி யோகேஸ்வரன் அவர்களைப் பற்றியும் எனது சமர்ப்பண உரையில் குறிப்பிட்டதுபோல நன்றி உணர்வோடு எனக்குத் தெரிந்தவற்றை அவர்களோடு பழகிய நினைவுகளை வைத்து **“1981 மே 31 ஜுன்1 யாழ்ப்பாணத்தில் நடந்தவை – அதன் தொடர்ச்சி”**என்று 3ஆவது நூலை வெளியிடுகிறேன்.

“என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே” என்று திருமூலர் கூறியபடி இறைவன் இன்றும் என்னை வாழவைத்துக் கொண்டிருப்பதே இப்படிப்பட்ட பெரியார்களை - மாமேதைகளை நினைவு படுத்தவே என்று நான் தற்போது கருதவேண்டியவனாகின்றேன்.

இதில் எனது பங்கினை விட மேற்குறிப்பிட்ட சகலரினதும் குடும்பத்தவர்கள்,உறவினர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், மனிதநேயமிக்க இவர்களை அறிந்து வைத்திருப்பவர்கள், தமது அனுபவங்களையும் அவர்களைப்பற்றி அறிந்தவற்றையும் எழுதி எனக்கு உந்துதல் அளித்தால் அதைவிட மகிழ்ச்சி கிடையாது. தயவுசெய்து இவ்விடயத்தில் உதவும்படி அனைவரையும் அன்போடு வேண்டுகிறேன்.

திரு. வெ. யோகேஸ்வரன் அவர்கள் 13.07.1989ல் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன் நான் அடிக்கடி கொழும்பு 7, இல். 410/27, பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள வீட்டிற்கு சென்றுவருவதுண்டு. இந்தியாவில் அமரர். சண்முகராஜா அவர்களுடைய குளோபல் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் அவரது இன்னொரு நிறுவனமாகிய SKY Courier Services இல் நான் OBC ஆக அடிக்கடி கொழும்புக்கு வந்து செல்வது வழக்கம். திரு. சண்முகராஜா அவர்கள் இல்லத்தில் தங்கினாலும், எனது பெரிய தந்தையாரை(அமரர். அமிர்தலிங்கம் அவர்கள்) அணுகி அவரது கடிதம் பெற்று உடனேயே இந்திய விசா பெற்று ஓரிரு நாட்களில் மீண்டும் சென்னை சென்று விடுவேன். திரு. யோகேஸ்வரன் அவர்கள் நவலோக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் அவரை நேரே போய் சந்தித்து


அளவளாவி இந்தியாவிலிருந்து அவரது நண்பர் கொடுத்துவிட்ட மருந்துகளையும், பழவகைகளையும் வழங்கியதும் மறக்க முடியாதவை.

13.07.1989 வியாழக்கிழமை மாலை அவர்கள் சுட்டுக் கொலைசெய்ப்பட்ட பின் எனக்கு தகவல் கிடைத்ததும் அடுத்த நாள் விமானத்தில் பயணித்து அவர்களது இறுதிச் சடங்குகளில் பங்கு கொண்ட சம்பவங்களை ஏற்கனவே அமரர். அமிர்தலிங்கம் அவர்களுடைய வரலாற்றின் மனிதன் நூலில் பதிவிட்டுள்ளேன். திரும்பத் திரும்ப ஒரே விடயத்தை குறிப்பிடுவதைத் தவிர்ப்பதால் இங்கு அதனைக் குறிப்பிடவில்லை. எனினும் 14.07.1989 காலையில் அந்த வீட்டிற்குச் சென்ற சமயம் இரத்தத்தைக் கழுவிய அந்த ஞாபகத்தை இங்கு குறிப்பிட வேண்டும். ஏனெனில் 17.05.1998ல் திருமதி யோகேஸ்வரன் அவர்கள் கைலாசபிள்ளையார் கோவிலுக்கருகில் அவரது வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட பின் அதே இரத்தம் கழுவும் காட்சியைக் கண்டேன்.

தனது கணவர் இறந்து விட்ட பின் கொழும்பில் வசித்துவந்த திருமதி சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு கட்சிப் பணிகளில் ஈடுபட்டார். 1997 இறுதியில்உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறும் என அரசு அறிவிப்பு செய்ததும் திரு. சித்தார்த்தன் அவர்கள் தமது கட்சியில் போட்டியிடுமாறு அழைப்பு விடுத்தார். (இதேபோல 2000ஆம் ஆண்டுத் தேர்தலிலும் யாழ்ப்பாணத்தில் திரு. சிவமகாராஜா அவர்களையும் கேட்டார். ஆனால் நான் நீங்கள் கூட்டணியில்தான் போட்டியிட வேண்டும் பொறுங்கள் எனக்கூறி கொழும்பிலுள்ள தலைவர்களுடன் விடாப்பிடியாக நின்று அவரை எமது கட்சியில் போட்டியிடச் செய்து வெற்றிபெறச் செய்தோம்).







ஆனால் திருமதி யோகேஸ்வரன் அவர்களிடம் தலைவர் சிவசிதம்பரம் அவர்களும், மற்றும் கூட்டணி உறுப்பினர்களும் எமது கட்சியாகிய கூட்டணியில் போட்டியிடுங்கள் என்றதும் அவர் சம்மதித்து யாழ்ப்பாணம் வர ஆயத்தமானார். அவருடன் நானும், திரு. திருமதி. சிவபாலன் ஆகியோர் (யாழ்ப்பாணம் கொழும்பு பாதைகள் பிரச்சினை காரணமாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியோடு) விமானத்தில் யாழ்ப்பாணம் வந்து பஸ்ரியன் ஹோட்டலில் சில தினங்கள் தங்கியிருந்தோம். எங்களுடன் அதே ஹோட்டலில் தங்கியிருந்த திரு. மாவை சேனாதிராசா அவர்கள் வருவோர் போவோருடன் தனியாக கதைத்து அனுப்புவதால் சினம் கொண்ட திருமதி. யோகேஸ்வரன், தான் தனது வீட்டுக்கு போனால் தனது கணவரின் ஆதரவாளர்களைச் சந்திக்க முடியும் எனக் கூறி வெளியேற, நாமும் அவருடன் கைலாச பிள்ளையார் கோவிலுகக்கு அருகிலிருந்த அவரது வீட்டிற்குச் சென்று, அங்கு வாடகைக்கு இருந்தவர்களோடு தங்கினோம்.

யாழ் மாவட்டத்தில் மொத்தம் 23 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 29 நபர்கள் போட்டியிடத் தரப்பட்ட தேர்தல் விண்ணப்பப்படிவத்தில் 12, 13 நபர்கள் கொழும்பில் கையெழுத்திட்டு கொண்டு வந்தது. மீதி 16, 17 நபர்களையும் யாழ்ப்பாணத்தில் எவ்வளவோ சிரமத்திற்கு மத்தியில் கையெழுத்திடச் செய்து பூரணப்படுத்தி யாழ். கச்சேரியில் கையளித்தபோது எமது விண்ணப்பப்படிவம் புளொட் மற்றும் ஈபிடிபி அமைப்பினரால் நிராகரிக்கப்பட்டது. உடனே தகவலை அன்று எமக்குப் பலவிதத்திலும் உதவிசெய்த திரு. மகேஸ்வரனது அலுவலகத்திற்குச் சென்று தொலைபேசி மூலம் விடயத்தை திரு. வீ.ஆனந்தசங்கரி அவர்களிடம் தெரிவித்தபோது உடனடியாக நீர் படிவத்தின் பிரதியைக் கொண்டு கொழும்புக்கு வாரும் என்றதும் அடுத்த விமானத்தில் கொழும்பு சென்றேன். திரு. நீலன் திருச் செல்வம் அவர்களின் உதவியோடு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பிரபல சட்டத்தரணியும், முன்னாளில் திழு. ஆனந்தசங்கரி அவர்களுக்கு சட்டக் கல்லூரியில் அதிபராகவும் இருந்த திரு.R.K.W, குணசேகரா அவர்கள் இந்த வழக்கில் எமது கட்சியின் சட்டத்தரணியாக ஆஜரானார். அவருக்கு அனுசரணையாக கோட்டேயில் உள்ள திரு. ஜெயம்பதி விக்கிரமரட்ண அவர்கள் உதவினார். அவரது வீட்டுக்கு 2, 3 தடவைகள் சைக்கிளில் சென்று இந்த வழக்குக்குத் தேவையான அனைத்துப் படிவங்களையும், மற்றும் விபரங்களையும் வழங்கினோம். திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் இரவிரவாக படிவங்களை பிரதி பண்ணி (போட்டோ கொப்பி) கஷ்டப்பட்டது எனக்கும் அங்கிருந்த கூட்டணித் தலைவர், மற்றும் உதவியாளர்களுக்கு மட்டுமே தெரியும். எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களாயிருந்த ஐவரில் எவரும் யாழ்ப்பாணப் பக்கமே தேர்தல் நேரத்திலும் சரி அதற்குப் பின்னரும் சரி தலைகாட்டவில்லை.

நான் சபரிமலை யாத்திரை சென்று சுவாமி தரிசனம் செய்த அன்றே எமது வழக்கின் தீர்ப்பு வெளியானது. நாங்கள் சபரிமலைக்குச் சென்றால் சுவாமி தரிசனம் செய்தபின்னர்தான் கொழும்புக்கோ அல்லது யாழ்ப்பாணத்துக்கோ தொலைபேசியில் தொடர்பு கொள்ளுவது வழக்கம். 1998 ஜனவரியில் கைத்தொலைபேசி அங்கு கிடையாது. அஞ்சல் அலுவலகத்தில் வரிசையில் நின்று 4, 5 தடவைகள் கொழும்பில் உள்ள கூட்டணி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது இன்னும் நீதிமன்றத்தால் வரவில்லை என்றே பதில் கிடைத்தது. இறுதியாக நாம் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற தீர்ப்புக் கிடைத்த செய்தியை திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களே கூறி உடனடியாக என்னை வருமாறு பணித்தார். நானோ சபரிமலை யாத்திரை முடித்து 4, 5 தினங்களில் வருவேன், வந்ததும் உடனே யாழ்ப்பாணம் வருகிறேன் எனக் கூறி 5 தினங்களின் பின் யாழ்ப்பாணம் சென்று பிரச்சாரங்களில் ஈடுபட்டேன். ஒரு நாள் ஓட்டோவில் தனியாக பிரச்சாரத்துக்கு சென்ற சமயம் புளொட் அமைப்பினர் இவ்வளவு காலமும் இருந்துவிட்டு இப்போ எங்கே வந்தீர்கள் என்று விதண்டாவாதம் புரிந்தார்கள்! நானோ நீங்கள் உங்கள் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு போங்கள் பின்னர் நான் போகிறேன் எனக்கூறி அமைதியாக நின்றேன். ஒரு இடத்தில் திருநெல்வேலி என்று நினைக்கிறேன், தோட்ட வேலை செய்து கொண்டிருந்த ஐயா ஒருவர் என் பக்கம் வந்து தம்பி நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாம்! நாங்கள் உங்களுக்குத்தான் - எப்ப வருவீர்கள் என எதிர்பார்த்தோம்! இவங்கள் செய்த அநியாயங்கள் போதும் என்று சொல்லிய செய்தியை வழமையாக குமரன் விடுதியில் தங்கியிருக்கும் நாம் கூடி இரவுஅளவளாவும்போது அடித்துச் சொன்னேன்! எங்களுக்கு வெற்றி நிச்சயம்! அந்தப் பெரியவரின் வாக்கு பலிக்கும் என்று! தேர்தல் தினத்தன்று நாம் தங்கியிருந்த குமரன் விடுதிக்கு பல வாக்காளர்கள் வந்து தமக்கு வாக்களிக்கும் இடம் தெரியவில்லை என்று கூற நாம் எந்தெந்த இடங்கள் என்று சொல்லி அவர்களை வழியனுப்பி வைத்தோம். முடிவு எமக்கு வெற்றியைத் தந்தாலும் போதியளவு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

3,540 வாக்குகளைப் பெற்று நாம் (கூட்டணி) 9 இடங்களையும், புளொட் 3,182 வாக்குகளைப் பெற்று 6 இடங்களையும், ஈபிடிபி 2,963 வாக்குகளைப் பெற்று 6 இடங்களையும், ஈபிஆர்எல்எப் 943 வாக்குகளைப் பெற்று 2 இடங்களையும் பெற்றனர்.

தேர்தலில் வெற்றிபெற்ற செய்தி கிடைத்ததும், அன்றேநான் கொழும்புக்குப் பயணமானேன்.

மாசி மாதம் திருமதி. யோகேஸ்வரன் அவர்கள் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து மாநகர

முதல்வராகப் பதவியேற்றார். திரு. அரவிந்தன்,திருமதி சரோஜினி யோகேஸ்வரனின் சகல விடயங்களையும் கவனித்து உதவி வந்தார்.

மே மாதம் 17ஆந்திகதிநான் எனது ஊரில் இருந்தேன். மதியம் 1 மணியளவில் நான் கிணற்றடியில் நீராடிக் கொண்டிருந்தபொழுது 4 வீடு தள்ளியிருக்கும் ஒரு நண்பர் ஓடோடி கிணற்றடிக்கே வந்துவிட்டார். என்ன விடயம் என்று கேட்டபொழுது முதல்வர் அம்மா இறந்துவிட்ட செய்தி இந்திய வானொலியில் தெரிவிக்கப்பட்டதாகவும் அதைத் தெரிவிக்கவே வந்ததாகவும் சொன்னார். உடனேயே அவசர அவசரமாக உடைமாற்றிக்கொண்டு சாப்பிடவும் போகாமல் நேரடியாக 786 இலக்க பேருந்தில் யாழ்ப்பாணம் சென்று பின்னர் அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் ஒரு ஓட்டோவில் கைலாசபிள்ளையார் கோவிலுக்கருகிலுள்ள முதல்வருடைய வீட்டிற்குப் போனேன். சில கட்சி ஆதரவாளர்களும் வீட்டில் குடியிருந்தவர்களுமாக வீட்டைக் கழுவ ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். வீடு முழுவதும் ஒரே இரத்தக்கறை. எனக்கு உடனேயே பழைய ஞாபகம் நினைவுக்கு வந்தது. (1989.7.13 மாலையில் கொழும்பு பௌத்தலோக மாவத்தையிலுள்ள இல. 410/27 இலக்க இல்லத்தில் திருவாளரகள். அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொல்லப்பட்டும் சிவசிதம்பரம் அவர்கள் படுகாயப்பட்டும் சுட வந்தவர்கள் மூவரும் கொல்லப்பட்டு அவர்கள் சிந்திய இரத்தம், 14.07.1989 மதியம் கழுவப்பட்டபோதில்தான் நான் சென்னையிலிருந்து வந்தேன்.)

முதல்வருடைய இல்லத்தில் தொலைபேசி வசதி இருந்ததால் உடனேயே நான் கொழும்பு அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு இறுதிச் சடங்கிற்கான ஏற்பாடுகள்பற்றி பேசினேன். வைத்தியசாலையில் எல்லாக் காரியங்களும் முடிந்தபின்னர் முதல்வரின் பூதவுடல் இரவுதான் வீட்டுக்கு கொண்டுவரப்பட்டது.யாழ்ப்பாணத்தில் அந்தக் காலத்தில் இரவு ஊரடங்கு அமுலில் இருக்கும். எனினும் ஓரிருவர் தகவலறிந்து வந்து சென்றார்கள். அடுத்தநாட் காலையில் 18.05.1998 கொழும்பிலிருந்து திரு. வீ. ஆனந்தசங்கரி, திரு. பொன். சிவபாலன், திரு. ந. இரவிராஜ், திரு. எஸ். சுதாகரன், திரு. ச. அரவிந்தன் ஆகியோர் விசேட விமானமூலம் யாழ் வந்து அஞ்சலி செலுத்தினர்.

19.05.1998 மக்கள் அஞ்சலிக்காக யாழ். மாநகர சபையில் பூதவுடல் வைக்கப்பட்ட பின் அன்றிரவு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடுத்தநாள் 20.05.1998 புதன்கிழமை பொரளை கனத்தையில் உடல் தகனம்செய்யப்பட்டது. கொழும்பில் அவரது பூதவுடலுக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்சர்களான கௌரவ. ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளே,நிமல் சிறிபால டி சில்வா, அலவி மௌலானா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். எமது கட்சிப் பாராளுமன்ற

உறுப்பினர்களான இரா. சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், பொன். செல்வராசா, கி. துரைராசசிங்கம், நீலன் திருச்செல்வம் ஆகியோருடன் சர்வோதயம் ஆரியரட்ண, பேராசிரியர் சோ. பத்மநாதன் போன்றோரும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மே 17 நடைபெற்ற இந்தச் சம்பவம் என்றும் எமது கட்சி உறுப்பினர்களால் மறக்க முடியாதது!










































ஜூன் மாதம் 1ஆந்திகதி இரவு எரிக்கப்பட்ட நூலக வரலாற்றில் பல விடயங்களை நான் முதல் நூலில் குறிப்பிட்டிருந்தாலும் சில விடயங்களை அரசியல் கருதி அங்கு பதிவிட்டிருக்கவில்லை. நூலகம் மீளத் திறக்க நடவடிக்கைகள் நடந்து கொண்டிருந்தபோது அதனை திரு. ஆனந்தசங்கரி அவர்கள் திறக்கக்கூடாது என்பதில் புலிகள் தீவிரமாக நின்றார்கள். இதனால் திறப்பு விழா நடைபெறவிருந்த தினத்திற்கு முதல்நாள் நடந்த சம்பவத்தை விபரமாகத் தெரிவிக்க வேண்டும்.

யாழ்ப்பாண நூல் நிலையத்திறப்பு விழாவுக்கு முன் நடைபெற்ற சம்பவம்!

சேதமடைந்த நூல் நிலையம் சந்திரிகா அரசினால் மீள புனரமைக்கப்பட்டு 14.02.2003ஆம் திகதி திறக்கப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு அதற்கான அழைப்பிதழ்களும் அச்சிடப்பட்ட நிலையில் 12ஆந்திகதி நூல் நிலையத்தை திறக்கக்கூடாது என கோரிக்கைகள் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து 13ஆந்திகதி நடைபெற்ற விசேட கூட்டத்தில் உறுப்பினர்கள் பதவி விலகியதுடன் நூல்நிலையத் திறப்பு விழாவும் இரத்துச் செய்யப்பட்டது! 13ஆந்திகதி நள்ளிரவு நூலகத் திறப்புகளும் காவலாளிகளிடமிருந்து அபகரிக்கப்பட்டன. 2003.02.14 பத்திரிகைகள் அனைத்திலும் நூலகத் திறப்பு விழா ரத்து என்றும், மேயரும் உறுப்பினர்களும் பதவி துறப்பு என்ற செய்திகள் வந்தபின் - மிக முக்கியமான வரலாற்றுத் தவறாக நூல் நிலையத்தின் பிரதான வாசலில் மும்மொழிகளில் காணப்படும் 14.02.2003இல் நூலகம் திறக்கப்பட்ட செய்தியையுடைய நினைவுக்கல் (7 வருடங்களின் பின் 2010இல் பொருத்தப்பட்டது) பொய்யான செய்தி. வரலாற்றை ஆராய மூலமாக இருக்கும் நூலகத்தில் பிழையான பதிவு இருப்பது சரியா? இது உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

13.02.2003 வியாழக்கிழமை காலையில் நானும் ஏனைய உறுப்பினர்கள் முதல்வர் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் பொதுநூல் நிலையம் திறப்பது சம்பந்தமாக உரையாடி நாம் வெளியேறிய சமயம் இரண்டு கிராமசேவகர்கள் முதல்வர் அலுவலகத்தினுள் சென்று அமர்ந்தனர். ஒருவர் சந்திரசேகரம், மற்றவர் நவரட்ணராஜா. (இவர்களில் ஒருவர் முதல்நாள் முதல்வரிடம் வந்து இந்த திறப்புவிழாவை பிற்போடுமாறு கேட்ட திரு. சிறில், திரு. கஜேந்திரன் ஆகியோருடன் வந்தவர். நாம் எங்களுடன் அப்பொழுது கதைக்கலாம் என்றபோது மறுத்ததுடன் அன்று 12.02.2003புதன்கிழமை மாலை 5.00மணிக்கு முடிவைத் தெரிவிக்குமாறும் கூறிச் சென்றவர்கள்.)
“இவர்கள் இருவரும் ஏன் இங்கே நிற்கிறார்கள் - வெளியே போகச் சொல்லுங்கள்” என முதலில் முதல்வரிடமும் உறுப்பினர்களிடமும் கூறி பின் முதல்வரின் செயலாளர் திரு. பூலோகரட்ணத்திடமும் கூறினேன்.

அனைவரும் எப்படிக் கூறுவது என்று மறுக்க நானே நேரடியாக அவர்களை வெளியே போகுமாறு வேண்டினேன். அவர்கள் தாம் முதல்வரைச் சந்திக்கவிருப்பதாகவும் எனக்கு இது தேவையில்லாத விடயமெனவும் - மேலும் தாம் மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் கிராமசேவகர்கள் எனவும் நான் வெளியாள் எனவும் கூறியதைத் தொடர்ந்து ஆத்திரமுற்று உரத்த குரலில் கடந்த 5 வருடங்களாக இந்த மாநகர சபை உறுப்பினராக இருந்த மூளாய் - வலிகாமம் மேற்கைச் சேர்ந்த என்னை இன்றுதான் வெளியாள் என்று தெரிகிறதோ? நாம் ஆரம்பத்தில் மாநகர சபைத் தேர்தல் காலங்களில் திருமதி. யோகேஸ்வரன், திரு. திருமதி. சிவபாலன் ஆகியோருடன் உடன் வந்தவன். அந்த நேரங்களில் உங்களைக் காணவே கிடைக்கவில்லை என்று பல கடந்த கால விடயங்களைக் கூறி இப்போது நாம் நூல் நிலையம் சம்பந்தமாக முடிவு செய்ய வேண்டிய நிலையிலிருப்பதால் நாம் வேறு விடயங்களில் தலையிட முடியாது வெளியே போங்கள் - தயவுசெய்து என்று கூறி இறுதியாக வெளியே போ என்று சத்தமிட்டேன். இந்நேரம் மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் திரண்டு கூடியிருந்தனர். இவர்களிருவரும் தம்மை முதல்வர் கூறினால்தான் வெளியே போவோம் என்று கூறியதைத் தொடர்ந்து, நான் முதல்வரை அவர்களைச் சந்திக்க முடியாது போங்கள் என்று கூறி வற்புறுத்தவே முதல்வரும் அவ்வாறு கூறியதைத் தொடர்ந்து அவர்கள் வெளியேற நான் முதல்வரை அவரது அலுவலகத்தினுள் போகுமாறு தெரிவித்து நானும் உள்ளே சென்றேன். நூலகம் ஆரம்பகாலத்தில் பகுதிபகுதியாக திறப்பித்த நிகழ்வுகளை அறிந்திருந்ததால் அறிக்கை ஒன்றை தட்டச்சு செய்வதற்காக தட்டெழுத்தாளர்கள் இருக்கும் பகுதியினுள் சென்று அவர்களுடன் இதுபற்றிய செய்தியை சுருக்கெழுத்தாளரிடம் கூறி குறிப்புக்களை விளக்கமாக அவர் எழுதும்படி அவருக்கு ஆலோசனை கூறிக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் முதல்வருடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி வந்து அளவளாவிக் கொண்டிருப்பதாக செய்திகள் வந்தன. நான் எனக்கு இது தேவையில்லை நாங்கள் எமது பணியை மேற் கொள்வோம் என்றுகூறி அந்தப் பகுதியிலிருந்தபடி சில குறிப்புக்களை எழுதிக் கொண்டிருந்தேன்.

அப்போது உறுப்பினர்களின் கூடத்திலிருந்து திரு. சுபத்திரன் என்னை அழைப்பதாக ஒரு ஊழியர் வந்து தெரிவித்ததும் நான் அந்த இடத்திற்குச் சென்றேன். அப்போது திரு. சுபத்திரன் அவர்களுடன் மேலும் பல உறுப்பினர்கள் உடனிருந்தனர். "முதல்வர் தனியாக இருப்பதால் நூல் நிலையம் பற்றி ஏதேனும் முடிவுகளை தனித்து எடுத்து விடுவார் - அவர்களுடைய அழுத்தங்களின் காரணமாக எனவே அவருடன் கதையுங்கள்" என்றார். நானும் முதல்வரின் தொலைபேசியில் அவருடன் தொடர்பு கொண்டு "ஏதேனும் திறப்புவிழா முடிவுகள் எடுப்பதாயிருந்தால் இறுதி முடிவு எமது சபையின் முடிவாக இருக்கும்.

அதை அவர்களிடம் தெளிவுபடுத்தும்படி கூறி முடிந்தால் எல்லா உறுப்பினர்களுடனும் ஒரு ஆலோசனையை மேற்கொள்ள வேண்டும்" என்று கூறியபொழுது முதல்வர் தொலைபேசியை திடீரென "கொஞ்சம் பொறுங்கள் - இவருடன் பேசுங்கள்" என்று கூறியபடி திரு. இளம்பரிதியிடம் தொலைபேசியைக் கொடுக்க, அவரும் தான் இன்னார் பேசுவதாகத் தெரிவித்து என்னை விளித்தார். நானும் எனது பெயரைத் தெரிவித்து முன்பு முதல்வரிடம் கூறிய கருத்தை திருப்பிக்கூறி "எல்லா உறுப்பினர்களுடனும் கதைக்கலாம் தானே?" என்று வினவினேன். அதற்கு அவர் "கூட்டணி உறுப்பினர்களுடன் மட்டும் பேச விரும்புவதாகவும் ஏனையோர் தம்மைப் பொறுத்த மட்டில் தேச விரோதிகள்" என்று கூறும்போது, பக்கத்திலிருந்த திரு. சுபத்திரன் அவர்களும் - "தாங்களும் அவர்களுடன் பேச வேண்டிய அவசியமில்லை நீங்கள் வேண்டுமானால் பேசுங்கள்" என்று கூறியதைத் தொடர்ந்து நான் போவதற்கு ஒத்துக்கொண்டு உறுப்பினர் கூடத்திலிருந்து முதல்வரது அலுவலகத்திற்குச் சென்றேன். அப்போது அவர்களில் ஒருவர் வெளியே நின்றிருந்ததை அறியாது நான் உள்ளே செல்ல முயன்றபோது என்னை மறித்து "நீர் யார்? முகுந்தனா?" என்று கேட்டபொழுது "ஓம்" என்று கூற உள்ளே கூட்டிச் சென்றார். வேறு எவரும் உள்ளே வரவில்லை. நான் உள்ளே சென்றபொழுது முதல்வருக்கு முன்பாக திரு. இளம்பரிதியும் அவரின் இரு புறமும் இருவரும் மொத்தம் மூவர் அமர்ந்திருந்தார்கள். நான் முதல்வருக்கு இடப்புறமாக இருந்த இரண்டாவது கதிரையில் அமர்ந்தேன். என்னைக் கூட்டிவந்தவர் எனக்கும் முதல்வருக்குமிடையிலிருந்த முதற் கதிரையில் அமர்ந்தார். நானும், முதல்வரும் மாநகர சபைப் பிரதிநிதிகளாகவும், அவர்கள் நால்வர் அரசியற்பிரிவாகவும் பேசஆரம்பித்தோம். நான் பேச முன்னர் நீதியையும், தர்மத்தையும், ஜனநாயகத்தையும் வலியுறுத்த இருப்பதைத் தெரிவித்த பின்பே இவர்களுடன் பேச்சை ஆரம்பித்தேன். பொதுமக்களிடமிருந்து குறிப்பாக வர்த்தகர்களிடமிருந்து வரி அறவிடுவது ஏ9 பாதையூடாக வரும் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் வரி அறவீடுகள் மற்றும் விசாரணைகள் பற்றியும், மாநகர சபை எல்லைக்குள் நல்லூர் மகோற்சவ காலத்தின்போது நல்லூர் பிரதேச சபையின் தலையீட்டை ஏற்படுத்தியமை, மானிடத்தின் ஒன்றுகூடலில் முதல்வரை அழையாது அவமதித்ததுடன் ஓரிரு நாட்களின் பின் கிராம அலுவலர்களது உந்துதலால் மாநகர சபை உறுப்பினராகிய கௌரவ. ச.அரவிந்தன் அவர்களை அழைத்ததுடன் பிரதி முதல்வர் என்ற தவறான கருத்து பரவுவதற்கு காரணமாயிருந்தமை, வீதிகள் செப்பனிடுவதற்குத் தேவையான கற்கள், மணல் போன்றவை கிடைப்பதற்கு தாமதத்தை ஏற்படுத்தும் தலையீடுகள் போன்றவை குறித்தும், முக்கியமாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர். அ. அமிர்தலிங்கம் அவர்களைத் துரோகி என பிரச்சாரம் செய்வது பற்றியும் இது தவறென்றும் அவரது வீட்டிலிருந்த சகல ஆவணங்கள் மற்றும் நூலகத்திலிருந்த புத்தகங்கள்,

அவரது வாழ்வின் முக்கிய சம்பவங்கள் கொண்ட புகைப்படங்கள் யாவும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களால் 1987ல் முற்றாக எரிக்கப்பட்டதும் இதைச்செய்தபின் இன்றைய நூல்நிலையத்தைப்பற்றி பேச எதவித அருகதையும் கிடையாது எனவும் ஆணித்தரமாக எடுத்தக் கூறினேன். ஆனால் அவரும் தொடர்ந்து அமிர்தலிங்கம் துரோகி என்று இரண்டு தடவைகளுக்கு மேல் குறிப்பிட்டார். ஒரு மனிதனின் சரித்திரத்திற்கு ஆதாரமான ஆவணங்களை அழித்துவிட்டு எதுவும் பேசலாம். ஆனால் உண்மை ஒரு போதும் அழியாது. நான் அவரது பேறாமகன் ஒருபோதும் இந்தக் குற்றச்சாட்டை ஏற்கமாட்டேன். நீங்கள் சொல்வதை நியாயப்படுத்துவீர்கள். நானும் எனது நிலைப்பாட்டை மாற்ற முடியாது. இது எமக்கிடையில் இன்னும் விரிசலை ஏற்படுத்தும் எனவே இதை இந்தளவில் விட்டு விடுவோம் என்று கூறினேன்.

ஜனநாயக முறையில் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 4 கட்சிகள் மாநகர சபையை நிர்வாகித்து வருவதுடன் கடந்த 5 வருடங்களில் 2 முதல்வர்களையும் ஒரு சபை உறுப்பினரையும் பலிகொடுத்து இம்மாநகர சபை இயங்கிவருகின்றது. தேச விரோதக் கும்பல் எனக் குறிப்பிடும் ஏனைய 3 கட்சிகளும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். இம்முறை பொதுத் தேர்தலில் கூட ஈபிடிபி தோல்வியடையவில்லை. கடந்த தேர்தலில் பெற்ற வாக்ககளை விட 10,000ற்கும் மேல் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கையில் அவர்களை நாம் மாநகரசபை விடயத்தில் எதிர்க்க முடியாது எனவும் எமக்கு 9 பிரதிநிதிகள் மட்டும் தான் என்றும் அவர்கள் மொத்தம் 14 பேர் எனவும் கடந்த 5 வருடங்கள் நாம் ஒன்றாகவே எதுவித எதிர்ப்புமின்றி சபை விடயங்களை முன்னெடுத்துச் சென்றதையும் குறிப்பிட்டேன்.

நூலகம் திறக்கும் ஏற்பாட்டைக் கைவிடுமாறும் இல்லையெனில் 1974ல் தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்தது போன்ற சம்பவங்கள் ஏற்படும் எனவும், ரத்தக்களரி ஏற்பட்டு பிணங்களைச் சந்திக்க வேண்டியேற்படும் என்றும் கூறியபோது நான் மிகவும் கோபப்பட்டு நூலகம் திருத்தப்பட்ட போது நீங்கள் எங்கிருந்தீர்கள்? அதைத் திருத்தி முடிந்தபின் திறப்பு விழாவுக்கு அழைப்பிதழ்கள் எல்லாம் அச்சிட்டு நாளை திறக்கப்பட இருக்கின்றபோது இன்று வந்து தடுப்பது நியாயமாகாது எனவும், யாழ்ப்பாணத் தமிழனுக்கு இருக்கும் ஒரே சொத்து அறிவுதான் என்றும், அந்த அறிவைப் பெறுவதற்கான ஒரு நூல் நிலையத்தால் இரத்தம் சிந்தப்படுவதை எந்த ஒரு அறிவுள்ளவனும் ஏற்க மாட்டான் எனவும், நாளை நாம் பதவியிலிருந்தாலே திறக்க முயற்சிப்போம் - எமக்கு அந்தப் பதவிகள் தேவையில்லை என்று கூறி உங்களால் முடிந்தால் சுடுவீர்கள் அதற்காக நான் பயப்படப் போவதில்லை — உண்மையைச் சொல்லவேண்டிய கடமை எனக்கிருக்கிறது என்றும் சொன்னேன். இவருடன் கூட இருந்த வேறு மூவருக்கு முன்பு நான் எதிர்த்துப்

பேசியதை விரும்பாமலோ என்னவோ பல தடவை என்னைப் பேசவிடாது தடுத்தார். ஆனால் நானும் கடுமையாக எனது கருத்தையும் கேட்க வேண்டும் என மேசையில் தட்டி வாதிட்டதுடன் எனது கருத்துக்களைச் சற்றுத் தொனியை உயர்த்தி அழுத்தமாகக் கூறினேன். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு தடவை அவர் சட்டென்று எழுந்த நின்று பின் இருந்தார். இறுதியாக தாம் முதல்வருடன் தனியாகப் பேச வேண்டும் என்று கூறியதைத் தொடர்ந்த நான் மாத்திரம் வெளியே வந்தேன். வெளியே நின்றிருந்த ஊடகவியலாளர்கள் என்னிடம் செய்தி கேட்க வந்தபோது நான் ஆத்திரத்துடன் உங்களிடம் கூற எனக்கு ஒன்றுமில்லை — நாம் தந்த செய்திகளைப் பிரசுரிக்காது இப்போது என்ன செய்தி வேண்டியிருக்கு என்று சொல்லிவிட்டு உள்ளே என்ன நடக்கிறது என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்த மாநகர சபை ஊழியர்களிடம் “நாளை திறப்பு விழா நடைபெறாது நீங்கள் உங்கள் வேலைகளைப் பாருங்கள்” என்று கூறிவிட்டு எனது இராஜினாமாக் கடிதத்தை தயாரிப்பதற்கு தட்டெழுத்தாளர்கள் இருந்த இடத்திற்குச் சென்றேன். மாலையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் நாம் பதவி விலகுவதாக அறிவித்தது யாவரும் அறிந்ததே!

14.02.2003 வெள்ளிக்கிழமை —“யாழ். பொதுநூலக திறப்புவிழா திடீர் ரத்து இரவோடு இரவாக நூலக சாவிக் கொத்து அபகரிப்பு — யாழ். மேயர் கந்தையன் இளம்பரிதி சந்திப்பு மேயர் உட்பட உறுப்பினர் அனைவரும் பதவிதுறப்பு” என்ற வீரகேசரி தலைப்புச் செய்தியில் உள்ளே “இதே வேளை நேற்றுக்காலை யாழ் மேயர் எஸ்.கந்தையன் யாழ் மாநகரசபைக் கட்டிடத்தில் உறுப்பினர் முகுந்தனுடன் தமது அலுவலகத்தில் தங்கியிருந்தவேளை விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற்பிரிவுப் பொறுப்பாளர் இளம்பரிதி அங்கு பிரசன்னமானார். அவரை வரவேற்ற மேயர் பின்னர் அவரை தனது அலுவலக அறைக்குள் அழைத்துச் சென்றார். உறுப்பினர் முகுந்தனும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார். மூவரும் பூட்டிய அறைக்குள் சில நிமிட நேரம் உரையாடினர். மாநகர ஊழியர்கள் யாரும் உள்ளே புகுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. சிறிதுநேரத்தின் பின்னர் இளம்பரிதி மேயருடன் வெளியே வந்தார். பின்னர் சென்றுவிட்டார்.”

தினமுரசு வாரமலர் பெப்.23 — மார்ச் 01,2003 இன் 5ஆம் பக்கத்தில் வெளியான “மூடிய அறைக்குள் நடந்த உண்மைகளைத் திறக்கிறார் கந்தையன்” என்றும் “நூல் நிலையம் திறப்பதை நிறுத்தி விடுங்கள் - மீறித் திறந்தால் பிணங்களைச் சந்திக்க வேண்டிவரும்” என்று சொன்னார் இளம்பரிதி” என்றும் தலைப்பிட்ட பேட்டியில் “மூடிய அறைக்குள் உண்மையில் என்ன நடந்தது?” என்ற கேள்விக்கு அவரது பதில் “இளம்பரிதியும் வேறு இருவரும் என்னைச் சந்திக்க வந்தார்கள். எனது

சக உறுப்பினரான தங்க முகுந்தன் என்பவருடன் நான் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டேன்.

நூல் நிலையம் திறக்கும் முயற்சியைக் கைவிடுமாறும் இல்லையென்றால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் இளம்பரிதி எச்சரித்தார். மீறித் திறந்தால் பல பிணங்களைச் சந்திக்க வேண்டிவரும் என்று கூறினார். முகுந்தனுக்கும் இளம்பரிதிக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் நடந்தது. ஒரு கட்டத்தில் இளம்பரிதி தனது கதிரையை விட்டு வேகமாக எழுந்து தனது கோபத்தைக் காட்டினார்" என்றிருக்கிறது.

இதேபோல த ஐலண்ட் பத்திரிகையிலும், **"Global community must take note of Jaffna situation"** என்ற முதற் பக்கத் தலையங்கத்தின் தொடர்ச்சியில் 5ஆம் பக்கத்தில் ".....Mayor Kandaiyah said that he had complained to the foreign human right representatives in Jaffna about threats to their lives and they had directed that all 23 members be provided extra security. He told the problem started last Thursday when LTTE Political Leader for Jaffna Ilamparithy called on him at the council around 10.30am. He was accompanied by four other LTTErs. When I asked him whether to invite other members he told me to call any TULFer and no one else. I invited councillor Thanga Mukunthan and a heated argument broke out between him and the LTTE's Ilamparithy. Jaffna leader warned that if we disobey them we will have to face severe consequences. He warned us not to have a repeat of Ulage Tamil Arachchi Conference of 1974 where 10 innocent Tamils were massacred. ......"என்றிருக்கிறது!

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் குழு அறிக்கையில்; The Jaffna Public Library: Closing Minds & Rivers of Blood .......On the 13th Morning, the day after the Manipay incident, Ilamparithy (alias Aanjeneyar), the LTTE's Jaffna political chief, walked into the Council and sought a meeting with the Mayor. The Mayor talked to Ilamparithy in the presence of Muhunthan, a young TULF councillor. We give the essence of the exchange as gathered from reliable sources. Ilamparithy told the Mayor that the Leader (Prabhakaran) wants them to stop the opening, and failure to comply will land them in the 'other' list [i.e. of 'traitors']. The

Mayor stuck to his position of being bound by the collective decision of the Council to open the library on the 14th. Ilamparithy raised objections to the participation of councillors from 'traitor' groups. The Mayor stood by those with whom he had jointly run the Council. Then Muhunthan chipped in, "Apart from other TULF leaders, you killed Mayors Sarojini and Sivapalan and placed so many obstacles before the Council. What moral right have you now to stop us opening the Library?" "Those killed were all traitors", replied Ilamparithy. "We cannot accept that, nor will the people", rejoined Muhunthan. Ilamparithy delivered a blunt parting shot, "If you go ahead with the opening, there will be a blood bath as happened at the International Tamil Conference in 1974…It may be far worse leading to many more deaths [than the 9 then]." ……
என்றிருக்கிறது!

இந்தசெய்திகள் பல எனது கிருத்தியம் (kiruththiyam.blogspot.com) வலைப்பதிவில் இருக்கிறது. எனது கிருத்தியம் வலைப்பதிவும், அதன் மின்னஞ்சல் முகவரியுமான thangamukunthan@gmail.com, எனது ஒரு முகநூலான Thangarajah Mukunthanயாரோ ஒருவரால் முடக்கப்பட்டு விட்டாலும் கிருத்தியத்தையும், முகநூலில் உள்ள படங்கள் மற்றும் செய்திகளையும் பார்க்கலாம். என்னுடன் தொடர்பு கொள்ளுவதாயின் tulfmukunthan@gmail.com அல்லது tmukunthan23@yahoo.com என்னும் மின்னஞ்சலிலும், கைத்தொலைபேசி இலக்கம் 0777279238 இலும் தொடர்பு கொள்ளலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களாயிருக்கும் எவரும் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாயிருந்தாலும் சரி, மாகாண சபை உறுப்பினர்களாயிருந்தாலும் சரி, முன்னாள் உள்ளுராட்சி உறுப்பினராயிருந்தாலும் சரி தமது கட்சியின் வரலாற்றை சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களை துரோகிகள் என்று கூறி அவர்களது தலைவராகிய தந்தை செல்வாவின் அகிம்சையை வெறுத்து ஆயுதத்தைத் தூக்கி மக்களுக்காகப் போராடுகின்றோம் எனக் கூறி – மக்களை வதைத்த சம்பவங்களை எவரும் மறுக்க முடியாது! இன்று அதே இயக்கங்களில் இருந்தவர்கள் தான் எந்தப் பாராளுமன்றப் பதவியை தூக்கி எறியச் சொன்னார்களோ அதிலே ஒட்டிக்கொண்டு இருக்கிறார்கள்! இருந்தார்கள்! தனித்தனியாக இயங்கி பின் கூட்டாகச் சேர்ந்தாலும் அவர்கள் அனைவரதும் இலக்கு கூட்டணியை அழிக்க வேண்டும் என்பதே! ஆனால் கூட்டணி

இருக்கும்வரை அது நடக்காது மக்கள் அவர்களின் பின்னாலேயே என்பதை அறிந்து கூட்டணிக்குள் வந்து அதை அழித்த பெருமை எம்மவர்கள் சிலருக்கும் பொருந்தும். எனக்கு கடந்த மாகாண சபைத்தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் இரண்டு வழிகளில் கிடைத்தது. ஒன்று எமது கூட்டணி சார்பில் மற்றையது புளொட் சித்தாரத்தன் அண்ணன் என்னிடம் நேரடியாகவே கேட்டார். நான் மறுத்து விட்டேன். காரணம் தந்தை செல்வா என் தலைவர் - அவரது அகிம்சைக் கோட்பாட்டுக்கு எதிராக எப்போது புலிகளை ஏகப்பிரதிநிதிகள் என்று ஏற்று அவரது தமிழரசுக் கட்சியில் - அவரது வீட்டுச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டார்களோ அன்றே தந்தையை— அவரது கோட்பாட்டை உதாசீனம் செய்தது மன்னிக்க முடியாத குற்றம்!

இவ்வளவு மக்களையும் கொன்று — அநாதைகளாக்கி — அவர்களது சொத்திழப்புக்களுக்கு காரணமாகி — ஏகப்பிரதிநிதிகளையும் காப்பாற்றாது — உங்களுக்கு வாக்களித்த மக்களையும் காப்பாற்றாது 22 பேரும் மௌனிகளாக இருந்த பாவம் ஒருபோதும் யார் மன்னித்தாலும் என்னால் மன்னிக்க முடியாது!

பதவி ஆசை ஒன்றே உங்கள் இலட்சியமாக இருந்திருக்கிறது! இன்றும் அதே நிலைதான்!

எழுதவேண்டியவை ஏராளம்! எங்கே எனது கட்டுரைகள் மகாத்மாவின் சுயசரிதையை விட நீண்டுவிடுமோ என அஞ்சுகிறேன். மக்களின் வாழ்க்கையோடு விளையாடும் போலி அரசியல்வாதிகளுக்காகத் தான் தமிழரைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றாரோ தந்தை என எண்ணி இத்துடன் நிறுத்துகின்றேன். (மீண்டும் இன்னொரு சந்தரப்பத்தில் - விரைவில் ஏனெனில் எனக்கு அரசியல் கற்பித்த ஆசான் திருமலை. மூதூர் அமரர். அ. தங்கத்துரை அவர்களைப்பற்றி நூலொன்றை எழுதும்போது சந்திக்கின்றேன்)

## பூரண திருப்தி!

எமது நூல் நிலையத்தைக் கல்விக் கோவிலாகவே நான் பெரிதும் மதித்து தினமும் ஒருதடவையாவது தரிசித்து படித்து எனது அறிவைப் பெருக்கி வருகின்றேன். மேலும் அருகிலிருக்கும் தந்தை செல்வா சமாதியையும் தினமும் துதித்து இரு கோவில்களையும் ஒரு தடவையாவது வலம் வருகிறேன். அருகிலிருக்கும் முனியப்பர் கூட அவர்களுக்குக் கொடுக்கும் மரியாதையை எனக்கும் கொடு என்று கேட்டதற்கு அமைவாக அவரையும் இடையிடை சென்று தரிசித்து வருகிறேன். கடந்த 01.06.2015 நூல்நிலையம் பற்றிய எனது நூல் வெளியீடு பூரண திருப்தியை எனக்கு அளித்தது! 14.02.2003இல் நடக்க இருந்த திறப்பு விழா முதல் இன்று வரை ஒரு பெரிய பாரமாக இருந்த ஒரு சுமையை இறக்கி வைத்த சந்தோஷம்! (பாரமென்பதைவிட ஒரு தவம் - விரதம் என்றும் ஏன் அதற்கு மேல் ஒருவெறி என்றும்

சொல்லலாம்) - 100 வீதமான திருப்தி இல்லாவிட்டாலும் இந்த நாள் வரைக்கும் என்னை உயிருடன் வாழ வைத்த அந்த பரம்பொருளுக்கு நன்றிகள்!

நூலகத்தின் மேல் எனக்கு தீராத பற்று இருக்கிறது. மாநகரசபை உறுப்பினர்களில் எத்தனைபேருக்கு வாசிக்கும் பழக்கம் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் எனக்கு சிறுவயதிலிருந்தே அந்தப் பழக்கம் இருப்பதுடன் எரிக்கப்பட்ட பெரிய நூல்நிலையத்தில் 1981க்கு முன்னரே அம்புலிமாமா நட்சத்திரமாமா போன்ற புத்தகங்களை வாசித்தவன் என்ற வகையிலும் நூலகத்தின் அருகிலிருந்த சுப்பிரமணியம் பூங்காவில் விளையாடியவன் என்ற ரீதியிலும் எனக்கு இவை மீண்டும் இருந்ததுபோல உடனேயே கட்டப்பட வேண்டும் என்ற ஆதங்கம் உண்டு. இதை நான் எமது மாநகரசபை பொன் விழா மலரின் வாழ்த்துச் செய்தியில் - மீண்டும் யாழ் நகர் தனது பழைய பொலிவைப் பெற்றால் அந்த மன நிறைவை நீண்ட நாட்கனவை அடையும் ஒருவனாக நானும் இருப்பேன். கனவு நனவாவது காலத்தின் கடமை. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற மூலரின் மந்திரத்தை தெய்வம்தான் நிலைநிறுத்த வேண்டும் என்று குறிப்பிட்டதை நினைவுபடுத்துவது பொருந்தம் என நினைக்கின்றேன்" என 22.02.2003 திகதியிட்டுவெளியட்ட யாழ் பொது நூலக வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள் என்ற செய்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

01.06.2015 அன்று நடைபெற்ற நிகழ்வை அப்படியே தொகுத்துத் தருவது எனக்கும் ஒரு திருப்தியை ஏற்படுத்தும். ஏனெனில் இதுவரை எந்த ஒரு ஊடகமும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கொடுக்க வேண்டியஅவசியமும் இல்லைத் தானே! எம்மவர்களால் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட ஒரு அபலைப் பெண்ணின் கதைகளை தொடராக எழுத வேண்டிய கட்டாயம் இருக்கும் போது இந்தச் செய்திகள் ஒன்றும் முக்கியமானவைகள் அல்லவே! 20வயதுகளில் எமது மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் நிர்வாகத்தில் இருந்த காலத்தில் நூலகத்தை நடத்தி வந்த காரணமும், பொது நூலகத்தில் அக்கறை கொள்ள வைத்திருக்கும்! கொழும்பில் இருந்த காலப்பகுதியில் 1990களில் மாநகர சபைபொது நூலகம், தேசிய நூலகம் மற்றும் தேசிய சுவடிகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றை உபயோகித்து வந்ததும், சுவிற்சர்லாந்தில்வசித்த காலத்தில் 2007 – 2012 எமதுSchwyzமாவட்ட நூலகத்தைப் பயன்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

நூலகருக்கும், ஆணையாளருக்கும் கடிதம் எழுதி அவர்களது பூரண ஒத்துழைப்புடன் இந்த நூல் வெளியிடப்பட்டது. எனது வெளியீடு என்ன நேரம் என்று கேட்டு அதற்கு முன்னுரிமை அளித்து பின்னர் நடைபெறவிருக்கும் ஒரு நிகழ்வுக்காக கேட்போர் கூடத்தையும் ஏற்பாடு செய்திருந்தனர். எனக்கு எரிக்கப்பட்ட நூலகக் கட்டிடத்திலேயே நிகழ்வு

நடைபெற வேண்டும் என்பதால் முன் வரவேற்புப் பகுதியிலேயே நிகழ்வை ஏற்பாடு செய்தேன். காலை 9.15க்கு எனது நிகழ்வை ஆரம்பிக்க இருந்த போதிலும் 9.45க்கே நிகழ்வு ஆரம்பமானது. முதலில் நூலகத்தை ஆரம்பித்த பெரியார் - பரோபகாரி புத்தூர் சக்கடத்தார் என அழைக்கப்படும் திரு. க.மு. செல்லப்பா அவர்களின் படத்திற்கு முன்பாக விளக்கு ஏற்றப்பட்டது. முன்னாள் மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் திரு. கா. பார்த்தீபன் அவர்கள் விளக்கை ஏற்றி வைத்தார். அடுத்து முன்னாள் நூலகர் திரு. க. தனபாலசிங்கம் அவர்கள் மறைந்த வண. பிதா. கலாநிதி டேவிட் அடிகளாரின் விளக்கை ஏற்றி வைத்தார். தொடர்ந்து நூலகத்தின் துணை நூலகர் திருமதி. வசந்தா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களும், நூலக வாசகர் என்ற வகையில் திரு. சதீஸ் அவர்களும் விளக்கை ஏற்றினர். விசேடமாக வைக்கப்பட்ட மெழுகுதிரியை நான் ஏற்றி நிகழ்வை ஆரம்பித்தேன். வருகை தந்திருந்த நூலக வாசகர்கள் அனைவரும் மலரஞ்சலி செய்த பின் நூலை வெளியிட்டு வைக்குமாறு முன்னாள் நூலகரை வேண்டி அவரை அழைத்த பின் நூலைப் பெற்றுக் கொள்ளுமாறு துணை நூலகரை அழைத்து நூல் வெளியிடப்பட்டது. முதற்பிரதியை துணை நூலகர் எமது மூளாய் இந்து இளைஞர் மன்ற முன்னாள் தலைவருக்கு கையளித்தார். தொடர்ந்து வருகைதந்த அனைவருக்கும் நூல் வழங்கப்பட்டது. பின் 2 நிமிடநேர மௌன அஞ்சலியும், தமிழ் வாழ்த்துப் பாடலுடனும் நிகழ்வு நிறைவுபெற்றது. நிறைவில் வருகை தந்த நூலகர் திருமதி. சுகந்தி சதாசிவமூர்த்தி அவர்கள் மலரஞ்சலி செலுத்திய அவருக்கு - முன்னர் என்னால் எழுதப்பட்ட யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட நினைவு இன்று – பலருக்கு உண்மைநிகழ்வுகள்தெரியாது (2013, 2014) என்ற எனது கிருத்தியப்பதிவின் பிரதியை வழங்கினேன். 10.00மணிக்கு முன்னர் நிகழ்வை முடித்த பின் கேட்போர் கூடத்தில் நடந்த நிகழ்வையும் பார்த்து திரும்பும்போது துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்தில் நூலைப் பற்றி இருவர் விமர்சித்துக் கொண்டிருந்த வேளையில் நூலகத்தை விட்டு வெளியேறி வந்த இரு வணக்கத்திற்குரிய பாதிரியார்களைக் கண்டதும் அவர்கள் யாரென்று என்னுடன்கதைத்துக் கொண்டிருந்த நண்பனிடம் கேட்க அவர் சொன்னார் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பழையமாணவர்கள் எனவும் நான் அவர்களிடம் சென்று என்னை அறிமுகப்படுத்திய பொழுது அவர்கள்எனது கிருத்தியத்தை தாம் வாசிப்பதாக குறிப்பிட்டு அளவளாவினார்கள். நூலகரிடம் தாம் வண. பிதா டேவிட் அடிகளாரின் முழு உருவப்படத்தை வழங்கியதாக சொல்லியதும் அவர்களிடமிருந்து விடைபெற்று நூலகத்தினுள் சென்று பார்த்தபோது கடந்த வருடம் என்னால் வழங்கப்பட்ட படம் இருந்த இடத்தில் முழு அளவிலான வண. பிதா. டேவிட் அவரகளுடைய படமிருந்தது! என்னால் அன்று வெளியிட்ட நூலை அவருக்கே சமர்ப்பணம் செய்திருந்தேன். அந்தப்படத்தைக் கண்டதும் உண்மையிலேயே அவரது ஆத்மா என்பணியை ஆசீர்வதித்தது போலவே நான் உணர்ந்தேன்! மாலையில் அவரது

பிறந்த ஊரான தும்பளைக்குச்சென்று அங்கு வருடாவருடம் மறவாது நடைபெறும் நன்றி நிகழ்விலும் பங்கு கொண்டது பூரண மன நிறைவை அளித்தது.

